**கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 மே 16 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 29 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கோறபைப்பற்று வடக்கு பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 13,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதனச் சொத்து கொள்வனவுக்காக செலவிடப்பட்ட ரூபா 3,208,980 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டிருக்கின்றது.

1.3.2 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி<br>(ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|
| காணிகள், கட்டிடங்கள் | 81,562,259 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 786,500 | நிலையான சொத்து பதிவேடு |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 1,123,129 | நிலையான சொத்து பதிவேடு |

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 13 கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் விதி 5(12) | பணம், களஞ்சியப் பொருட்கள் என்பன மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான காரணங்கள் விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,944,988 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 2,415,575 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,529,413 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவீடு

பிரதேச சபை எல்லைக்குள் 10 தொலைத் தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்தும் அவற்றில் நான்கிற்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 180,000 தொகையான நிறுவுதல் கட்டணம் மற்றும் வருடாந்த உரிமம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு வீத வரிகள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாததினால் பிரதேச சபையின் பிரதான வருமான மூலமான இவ்வரிகளின் மூலம் கிடைக்கவேண்டிய வருமானத்தை வருடாந்தம் இழந்து வருகின்றது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

2005 – 2006 காலப்பகுதியில் பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம், பிராந்திய உள்ளூராட்சி அலுவலகம் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு போன்ற நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 13 மோட்டார் வாகனங்களை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 வாகனப் பயன்பாடு

சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 18 வாகனங்களுக்கும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பயன்படுத்தப்படாமல் உள்ள சபையின் சொத்துக்கள்

கிழக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து 2001 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 300,000 பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் 2005 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட உழவு இயந்திர இழுவைப் பெட்டியும் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) உள்ளக கட்டுப்பாடு